


புதுக்கோட்டை மாவட்டம்/மாநகராட்சி, ஏ.என்.எஸ் பிரைடு ஹோட்டலில் என் ஊர், என் கனவு திட்டம், இலக்கு 2030 (உத்திகள் மற்றும் செயல் திட்டம்) தயாரிப்பதற்கான மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 04.02.2026 அன்று நடைபெற்றது. உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் தெற்கு ஒன்றியம், மூங்கில்பாடி கிராமத்தைச் சேர்ந்த மொழிப்போர்த் தியாகி ரெங்கராஜ் அண்மையில் இயற்கை எய்தியதை அறிந்து, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., என்.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தங்க.சித்தார்த்தன், தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் மா.இராஜ்குமார், சி. ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

### கிராமப்புற பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாய் இருக்கும்

# நபார்டு வங்கிக்கு வருமான வரி விலக்கு வழங்க வேண்டும்!

## மாநிலங்களவையில் நேரமில்லா நேரத்தில் கேஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தல்!



நாமக்கல், பிப்.13 - டெல்லியில் மாநிலங்களவை கூட்டத் தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் கலந்து கொண்டு நேரமில்லா நேரத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் உடனடியாக நீக்கி, அதன் நிதி சுயாதீனத்தையும் செயல்திறனையும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்..

மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய கே.ஆர். என். இராஜேஷ்குமார்,, “NABARD நாட்டின் ஊரக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. வேளாண் கடன், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதில் NABARD மிக முக்கியப் பங்காற்றி வருகிறது. நாட்டின் செல்வத்தின் அடித்தளமாக இருக்கும் ஊரக வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் உண்மையான Mother Bird தாய் பறவையாக NABARD திகழ்கிறது”.

NABARD தற்போது செயல்பட்டு வரும் நிதி கட்டமைப்பு, அதன் நோக்கங்களை முழுமையாக நிறைவேற்ற தடையாக இருப்பதாகவும் அவர்சுட்டிக்காட்டினார். NABARD மீது விதிக்கப்படும் வரிகள், ஊரக மக்களின் நலனுக்காக நேரடியாக செலவிடப்பட வேண்டிய வளங்களை குறைத்து வருவதாக கூறிய அவர், “எனவே NABARD மீது விதிக்கப்பட்டுள்ள வருவமான வரிகளை அரசு உடனடியாக நீக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

மேலும், NABARD நிர்வகிக்கும் ★★ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)★★க்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்தார். “ஊரக உட்கட்டமைப்பு, பாசன வசதிகள், சந்தை அணுகல் போன்றவற்றிற்கு RIDF மிகவும் அவசியமானதாக இருந்தாலும், தற்போதைய ஒதுக்கீடு போதுமானதாக இல்லை” என்றார்.

RIDF நிதி முழுமையாக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

MSME, HUDCO, SIDBI போன்ற அமைப்புகள் முக்கியமானவை என்றாலும், அவற்றுக்கான நிதியுதவி NABARD இன் வளங்களை பாதிக்கும் வகையில் இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத்திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாநகராட்சி, 1ம் மண்டல அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் ஆகியோர் முன்னிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கினர். இதில் பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ், மண்டலத் தலைவர் வெ.உமா மகேஸ்வரி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; “பொய்யாலும் விளம்பரத்தாலும் உயர்ந்தவர் வாழ்க்கை நிலைக்காது” என்று எடப்பாடி கூறியிருக்கிறாரே, யாரைப் பற்றி ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இப்படி அவர் தனது மனசாட்சியைத் திறந்து கூறியிருப்பது, கண்ணாடி முன் நின்று கொண்டு தனக்குத் தானே! எடப்பாடி பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து, புளுகு ராமாயணம் எழுதிய புரட்டு சேக்கிழார்ப் புலவர் ஆயிற்றே !**


இரண்டாம் ஆண்டு

நினைவஞ்சலி

பிப்ரவரி 13



அண்ணா அறிவாலயம்

N.ஜெயக்குமார்

(துணை மேலாளர், அண்ணா அறிவாலயம்)

11.09.1950 - 13.02.2024

இப்படிக்கு,

Dr.அருண் ஜெயக்குமார் M.D.S.

துணைச் செயலாளர்,

மாநில மருத்துவ அணி.

மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்